சுற்று நிருப இலக்கம் : 13/2017

கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழு (மே மா)
இலக்கம் : 109, நான்காவது மாடி,
பிரதான வீதி,
பத்தரமுல்ல.
2017.07.28

மேல் மாகாணத்தின் அனைத்து பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்,
மாவட்ட கிராமிய வங்கி ஒன்றியங்கள், சணச சங்கங்கள், மாவட்ட கூட்டுறவுச் சபைகள் மற்றும்
ஏனைய அனைத்து பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்க தலைவர்களுக்கும்,

**<u>மகப்பேற்று விடுமுறை</u>**

தலைப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட 7/2004 ஆம் சுற்று நிருபத்தின் 2:7:8 ஆம் பிரிவிற்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவினை பதிலீடு செய்வதை மேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழு அங்கீகரித்துள்ளது என்பதை ஆணைக் குழு நியதிகளிற்கமைவாக இத்தால் அறியத் தருகிறேன்.

2)

**2:7:8 :**

7/2004 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் 2:7:1 உப பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சம்பளத்துடன் கூடிய மகப்பேற்று லீவு நிறைவடைந்த பின்னர் ஊழியர் வேண்டுவாராயின், குழந்தைப் பராமரிப்பிற்காக 84 நாட்கள் சம்பளமற்ற லீவு வழங்கப்படல் அவசியம். இக்காலப் பகுதியினுள் வழங்கப்படும் அனைத்து வர்த்தக விடுமுறை தினங்களும், வார இறுதி விடுமுறைகள் போன்றவையும் அச்சம்பளமற்ற மகப்பேற்று விடுமுறைக் காலத்தினுள் அடங்கும்.

**2:7:9 :**

மேலும், குழந்தையினது அல்லது தாயினது விஷேட நோய் நிலைமையொன்று காரணமாக மேலும் விடுமுறை அவசியம் என அரச விஷேட வைத்தியரொருவரினால் பரிந்துரை செய்யப்படுமாயின், அப்பரிந்துரைக் காலப் பகுதிக்கு 84 நாட்களுக்கு மேற்படாத வகையில் மேலும் சம்பளமற்ற லீவு வழங்கப்படல் அவசியமாகும். இக்காலப் பகுதியினுள் வழங்கப்படும் வர்த்தக விடுமுறை நாட்கள், வார இறுதி விடுமுறை நாட்கள் போன்றன அச்சம்பளமற்ற மகப்பேற்று விடுமுறைக் காலத்திற்குட்படும்.

3) 7/2004 சுற்று நிருபத்தின் ஏனைய விடயங்கள் அனைத்தும் அதில் உள்ளவாறே வலிதுடையதாகும்.

எஸ்.ஏ.எல்.ரங்கனீ
செயலாளர்
கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக் குழு
மேல் மாகாணம்

பிரதிகள் :

01. பிரதான செயலாளர், மேல் மாகாணம்.
02. செயலாளர், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, மேல் மாகாணம்.
03. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்/ சங்கப் பதிவாளர், மேல் மாகாணம்.
04. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் - (கொழும்பு/கம்பஹ/களுத்துறை)
05. பணிப்பாளர், மேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்டம்.
06. செயலாளர், மத்திய அரசின் கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழு.
07. அனைத்து மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுச் செயலாளர்கள்.
08. அனைத்து தொழிற் சங்கங்கள் ஒன்றியங்கள்